ஆம் நிதி ஆண்டுக்குப் பதிலாக, 1992-93 ஆம் நிதியாண்டிலே, அது சேர்க்கப்பட்டுள்ளதாக முடிவு எடுக்கப்பட்டு இருக்கிற காரணத்தினாலே, அதற்கான மதிப்பீடுகள் தயாரிப்பதற்காக, நம்முடைய நெடுஞ்சாலைத் துறையினுடைய தலைமைப் பொறியாளருக்குத் தாக்கீது அனுப்பப்பட்டு, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ரயில்வே துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஏறத்தாழ 3 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில், இந்த 1992-93 ஆம் ஆண்டு, எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, அந்தப் பணியை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து இருக்கிறோம். ஆகவே, உடனடியாக நடவடிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இந்தப் பரிந்துரையைச் செயலாக்குவதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 326—திரு. ஆ. செல்லதுரை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

326 –

சடையனேரி கால்வாயை சீர்செய்தல்

*6128—திரு. ஆ. செல்லதுரை:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்செந்தூர் தொகுதியில் சடையனேரி கால்வாய் பழுதடைந்துள்ளதை சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிதிநிலைமைக்கேற்ப இந்தக்கால்வாயை சீர்படுத்துவதற்கான பணி எடுத்து. முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10-05

திரு. ஆ. செல்லதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எங்களின் காவல் தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சியில் எங்களுடைய தொகுதியிலுள்ள சடையனேரி கால்வாயில் தண்ணீர் நிரம்பினால்தான் அங்கே குடிப்பதற்கே தண்ணீர் கிடைக்கும். இன்றைக்கு அந்தத் தண்ணீர் இல்லாத காரணத்தினால் கடல்நீர் வந்து குடிப்பதற்கே தண்ணீர் இல்லாமல் அந்தப் பகுதி மக்கள் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கின்ற இந்த நேரத்தில் நீங்கள் உடனடியாக எங்களுக்கு அந்த நிலையையாவது மாற்றி அந்த சடையனேரி கால்வாயை அகலப்படுத்தி விரிவுபடுத்தி அந்தப் பகுதியில் இருக்கின்ற

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

அனைத்துக் குளங்களையும் நிரப்பித் தர அரசு செயற்குறிப்புகள் ஏதாவது உண்டா? உடனடி ஏற்பாடு செய்வதற்கு ஆவன செய்ய முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சடையனேரி கால்வாய் தாமிரபரணி ஆற்றினுடைய உபரி நீரைக்கொண்டு 1974-ல் அமைக்கப்பட்டது. இந்தக் கால்வாயின் மூலம் ஏறத்தாழ 12 குளங்களுக்கு தண்ணீர் நிரப்பமுடியும். இது ஒரு முக்கியமான கால்வாய் என்பதை அரசு நன்றாக அறியும். ஆகவே வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்ற காலத்திலே தாமிரபரணி ஆற்றிலே ஏறத்தாழ 100 கன அடி மட்டும்தான் அந்தக்கால்வாயில் செல்லமுடியும் என்ற காரணத்தினாலே இன்றைக்கு அந்தக் கால்வாயை அகலப்படுத்துவது மிக முக்கியம் என்று இந்த அரசு கருதி ஏறத்தாழ ரூபாய் 5.75 கோடி செலவிலே ஒரு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அந்தத் திட்ட மதிப்பீடு அரசினுடைய பரிசீலனையில்இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியில் இருக்கின்ற பாசன வசதியை மேம்படுத்துவதற்காக இந்தக் கால்வாயை பலப்படுத்துகின்ற பணியை இருக்கின்ற நிதியாதாரங்களைப் பொறுத்து இந்தத் திட்டம் சேர்த்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. செல்லதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்களுக்கும் எங்களுடையதங்கத்தலைவி புரட்சி தலைவி அவர்களுக்கும் நெஞ்சார நன்றியைத்தெரிவித்துக் கொள்வதோடு சடையநேரி குளம் நிறைந்ததும் செம்பரிகுளம் படுகைக்கு தண்ணீர் வந்து—அங்கே சுமார் 300 விவசாயிகள் விவசாயம் செய்கிறார்கள்—அது முழுமையையும் அந்தத் தண்ணீர் அழித்து விடுகிறது, அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு ஏதேனும் செயற்குறிப்பு வைத்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கேட்கப்பட்டிருக்கின்ற கேள்வி சடையநேரி கால்வாயைப் பற்றி, அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 327—திரு. எஸ். அன்பழகன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

327—

நாமக்கல் வட்டத்தில் புதிதாக தொகுப்பு வீடுகள்

*1746—திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா: